


புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2049 | நவம்பர் 08 2018 | புரட்சி 17 | முழக்கம் 43 | விலை: ரூ.3.00


# சபரிமலை கோயிலில் பெண்கள் ஏன் நுழையக் கூடாது

*அரை நூற்றாண்டு காலமாக சபரிமலை அய்யப்பன் கோயில் 'தீட்டாகிறார்கள்' என்ற காரணத்துக்காக பெண்களில் கோயில் வழிபாட்டு உரிமைக்குப் போடப்பட்டிருந்த தடையை நீக்கி உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. ஆனாலும் அய்யப்பன் கோயிலின் பார்ப்பன அர்ச்சகர்களான தந்திரிகள், கேரள அரசை மிரட்டி வருகிறார்கள். கேரள அரசு தீர்ப்பை எதிர்த்து மறு சீராய்வு மனு போட்டால்தான் அரசு பிரதிநிதிகளோடு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்கிறார்கள். 'நாயர் சொசைட்டி' என்ற உயர்ஜாதியினரின் அமைப்பும் பந்தளம் மன்னர் குடும்பமும் தீர்ப்புக்கு எதிராக ஆட்சியை மிரட்டுகிறது.*

கேரள காங்கிரஸ்காரர்களும் பா.ஜ.க.வின ரோடு கைகோர்த்துக் கொண்டு பெண்கள் உரிமைக்கு எதிராகப் போராடுகிறார்கள். ஆர்.எஸ்.எஸ்.சும் பெண்களுக்கு எதிராகவே பேசுகிறது. பெண்களையே இன்னும் 'சுயம்சேவக்குள்ளாக' அங்கீகரிக்காமல் ஆர்.எஸ்.எஸ்.இல் உறுப்பினராகத் தடை செய்து வைத்திருக்கும் அமைப்பிடமிருந்து வேறு எதை எதிர்பார்க்க முடியும்? வேடிக்கை என்னவென்றால் கேரளாவில் பா.ஜ.க. நாளிதழான ஜென்ம பூமியில் ஆர்.எஸ்.எஸ். உயர்மட்ட சிந்தனைக் குழுவான 'பாரதிய விச்சார கேந்திரம்' என்ற அமைப்பில் முக்கியப் பொறுப்பு வகிக்கும் ஆர். சஞ்சய்யன் என்பவர் உச்சநீதிமன்றத் தீர்ப்பை வரவேற்று கட்டுரை தீட்டியுள்ளார்.

அனைத்து வயது பெண்களையும் அய்யப்பன் கோயிலில் அனுமதிக்கக் கோரி ஆர்.எஸ்.எஸ். தலைவர்களே 2006ஆம் ஆண்டில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள் என்று கேரள அமைச்சர் சுரேந்திரன் கூறியிருக்கிறார்.

இந்துத்துவா சக்திகள் கேரளாவிலும் தமிழ்நாட்டிலும் பெண்களைத் திரட்டி, உச்சநீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்துப் போராட வைக்கிறது. மதபோதையிலும் கடவுள் போதையிலும் மூழ்கிக் கிடக்கும் பெண்களில் பெரும் பகுதியினர் தங்கள் அடிமைத்தனம் மதத்தின் பெயரால் வரும்போது அடி பணிந்து பயபக்தியோடு ஏற்கத் தயாராகவே இருக்கிறார்கள். பெண்களுக்கான உரிமை யானாலும் விடுதலையானாலும் அது ஆண்கள் ஆதிக்கத்தில் மட்டுமே இருக்கிறது என்று பெண்ணுரிமை எதிர்ப்புக்கான எல்லைகளை சுருக்கிக் கொள்ளவே பல பெண்ணுரிமையாளர்கள் விரும்புகிறார்கள். ஜாதியமைப்பும் அதை நிலைப்படுத்தி வரும் மதங்களும் அதன் வழியாகத் திணிக்கப்படும் சடங்குகளும் நம்பிக்கைகளும் பெண்ணடிமை யின் பண்பாடுகளாக இருப்பதை சிந்திக்க மறுக்கிறார்கள். மத எதிர்ப்பு சடங்குகள் எதிர்ப்புகளிலிருந்து விடுவித்துக் கொள்ளாத எந்தப் பெண்ணும் முழுமையான உரிமைப் பெண்ணாகவோ, அல்லது விடுதலைப் பெண்ணாகவோ முடியாது. சமூகம் இந்த மதப் பண்பாடுகள் வழியாக பெண்களுக்கான அடிமை ஒழுக்கத்தை நல்லொழுக்கமாகவும் பொது ஒழுக்கமாகவும் கட்டமைத்திருக்கிறது.

"இந்துத்துவத்தை எதிர்க்கிறோம் இந்து மதத்துக்கு நாங்கள் எதிரிகள் அல்ல; பெண்ணுரிமையை ஏற்கிறோம்; ஆனால் பெண்களுக்கு சமத்துவத்தை மறுக்கும் மதங்களை எதிர்க்க மாட்டோம்" என்பது தான் இங்கே பொதுவான முழக்கமாகவே இருந்து வருகிறது.

வரலாற்றைக் கூர்ந்து நோக்கினால் பெண்களுக்கான ஒவ்வொரு உரிமையும் மதத்தின் பிடியிலிருந்தே மீட்டெடுக்கப்பட் டிருக்கின்றன என்ற உண்மை புரிய வரும்.

- இந்து சமூகம் கணவன் இறந்து எரியூட்டப்படும் நெருப்பில் மனைவியை உயிருடன் எரிக்கும் 'சதி' எனும் கொடுமையை ஒழிக்க சட்டம் போடும்போது பார்ப்பனர்களும் வைதிகர்களும் எதிர்க்கவே செய்தனர். 1829ஆம் ஆண்டு வில்லியம் பெண்டிங், இந்தக் கொடுமையை சட்டப்படி ஒழித்தாலும் சட்டத்தை மீறி 'சதி' நடந்து கொண்டுதான் இருந்தது.
- பெண்ணாகப் பிறந்த குழந்தையைக் கொல்லும் 'பெண் சிசுக் கொலை' - மதம் கட்டமைத்த கொடுமைதான் இன்று வரை அது தொடரவே செய்கிறது. 1870இல் தடைச் சட்டம் வந்தது. ஆனாலும் பெண் குழந்தைகள் மீதான வெறுப்பு மட்டுமல்ல; பெண் பக்தைகள் என்றாலும் 'தீட்டுக் குரியவர்கள்' என்று இன்று வரை அவமதிக்கப்படுகிறார்கள்.


**"இந்துத்துவத்தை எதிர்க்கிறோம்
இந்து மதத்துக்கு நாங்கள் எதிரிகள் அல்ல;
பெண்ணுரிமையை ஏற்கிறோம்;
ஆனால் பெண்களுக்கு சமத்துவத்தை மறுக்கும்
மதங்களை எதிர்க்க மாட்டோம்" என்பதுதான்
இங்கே பொதுவான முழக்கமாகவே
இருந்து வருகிறது.**


- 1855இல் கிரான்ட் என்ற பிரிட்டிஷ் கவர்னர் ஜெனரல் இந்தியாவுக்கான ஆலோசனைக் குழுவில் இந்து விதவைகள் மறுமணம் என்ற மசோதாவை அறிமுகப்படுத்தினார். அப்போதும் பார்ப்பனர்களும் வைதீகத்தில் ஊறிய பழமைவாதிகளும் இந்து பழக்க வழக்கங்களில் கிறிஸ்தவர்கள் தலையிடுகிறார்கள் என்று கூறி கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். அரசுக்கு எதிர்ப்பு மனுக்களை அனுப்பினர். 1889இல் ஜி.சுப்ரமணிய அய்யர் தன்னுடைய விதவை மகள் சிவப்பிரயாம்பாள் என்பவருக்கு மறுமணம் செய்து வைத்தார். அதற்காகப் பார்ப்பனர்கள் ஒன்று கூடி அவரை சமூகத்திலிருந்து 'ஜாதி நீக்கம்' செய்து வைத்தனர்.
- குழந்தைகளுக்கு திருமணம் செய்து வைக்கும் 'பால்ய விவாகம்' என்ற கொடுமையை 'வர்ணக் கலப்பு' ஏற்பட்டுவிடாமல் தடுக்க பார்ப்பனர்கள் சமூகத்தில் திணித்தனர். 1924இல் சென்னை மாகாண சட்ட ஆலோசனைக் குழு வழியாக பால்ய விவாக எதிர்ப்பு மசோதா கொண்டு வரப்பட்டது. அப்போதும் பார்ப்பனர்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்தார்கள். விதவை மறுமணச் சட்டம் வந்தவுடன் பணக்காரக் குடும்பத்து 'விதவை' சிறுமிகளை ஏழைக் குடும்பத்து சிறுவர்கள் (ஒரே ஜாதிக்குள்) திருமணம் செய்ய முன் வந்தனர். ஏழை குடும்பத்து விதவைகள் நிலையோ மிக மோசமானது. எவரும் திருமணம் செய்ய முன் வரவில்லை. அதற்குப் பிறகு திருணமான சிறுவன் தொடக்கப் பள்ளியில் சேருவதற்கு தடைவிதிக்கப்பட்டது. இந்து மதப் பழக்கங்களில் கிறிஸ்தவர்கள் தலையிடுகிறார்கள் என்றே அப்போதும் பார்ப்பனர்கள் கூக்குரலிட்டார்கள். குழந்தைகள் திருமணத்தைத் தடுப்பது இயற்கைக்கு எதிரானது என்று 1915இல் சென்னை மகாஜனசபை என்ற அமைப்பு அரசுக்கு கடிதம் எழுதியது. இது குறித்து மக்களிடம் கருத்து கேட்பதே முட்டாள்தனம் என்று அக்கடிதம் கூறியது.
- இந்து மதத்தைச் சார்ந்த ஆணுக்கு 15 வயதும், பெண்ணுக்கு 12 வயதும் திருமணத்துக்கு உகந்த வயது என்று 1927இல் சென்னை மாகாண சட்டசபையில் மசோதா கொண்டு வரப்பட்டபோது கடும் எதிர்ப்புகள் வந்தன. இந்த மசோதாவுக்கு காரணமாக இருந்தவர் சாரதா.
- பெண்களுக்கு கோயில் சேவை என்ற பெயரில் தேவதாசிகளாக்கும் கொடுமையை ஒழிக்கும் மசோதாவும் பார்ப்பனர்களால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மசோதாவைக் கொண்டு வந்ததில் முனைப்புக் காட்டினார். பெரியார் ஆதரித்தார்; சத்தியமூர்த்தி போன்ற தேசிய பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள். உண்மையில் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டிக்கு முன்பாகவே 1912லேயே மானக்ஜி தாதாபாய் மற்றும் முதோகர் என்பவர்கள் இணைந்து இந்தக் கொடுமைக்கு எதிராக 3 மசோதாக்களைக் கொண்டு வந்தனர். அப்போது இந்திய அரசு அதில் ஆர்வம் காட்டவில்லை. 1927லிருந்து முத்துலட்சுமி ரெட்டி போராட்டம் தொடங்கியது. தென்னகத்துக்கு சுற்றுப் பயணம் வந்த காந்தியும் தேவதாசி முறைக்கு எதிர்ப்பாகப் பேசியும்கூட பார்ப்பனர்கள் பணியவில்லை. இந்தியா 'சுதந்திரம்' பெற்ற பிறகு 1947ஆம் ஆண்டு அக்டோபர் 9ஆம் தேதி பி.பாலசுப்ரமணியம் என்பவரால் சென்னை மாகாண சட்டசபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானம்தான் தேவதாசி முறையை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அதே மதவெறி தான் 2018ஆம் ஆண்டிலும் பெண்கள் சபரிமலை அய்யப்பன் கோயிலுக்குள் நுழைவதை எதிர்க்கிறது.

பெண்களுக்கான உரிமைப் போராட்டம் மதவாதம் - பார்ப்பனிய எதிர்போடு நடத்தப்பட வேண்டிய அவசியத்தையே வரலாறு உணர்த்துகிறது.

பெண்கள் அமைப்புகள் - முற்போக்கு அமைப்புகள் - இந்தப் பிரச்சினையில் மவுனத்தை உடைத்து பெண்களுக்கு ஆதரவாகவும் வைதீக இந்து மதத்துக்கு எதிராகவும் வெளியே வரவேண்டும்.

தலையங்கம்

## ஜாதி எதிர்ப்புச் சட்டம்: பிரிட்டன் அரசு பின் வாங்கியது

இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போகும் பார்ப்பனர்களும் உயர் ஜாதியினரும் தங்களுடைய ஜாதியப் பெருமைக ளையும் 'தீண்டாமை' வெறுப்பு களையும் சேர்த்து சுமந்து கொண்டே போகிறார்கள். குறிப்பாக பிரிட்டனில் இந்தியாவிலிருந்து வேலைக்குச் சென்ற 'தலித்' மக்களுக்கு எதிராக 'தீண்டாமை' மறைமுகமாக திணிக்கப்பட்டே வருகிறது. இதற்காகவே 'ஜாதிக் கண்காணிப்பு' என்ற அமைப்பு ஒன்று பல ஆண்டு களுக்கு முன்பே இலண்டனில் உருவாக்கப்பட்டது. 'ஜாதிப் பாகுபாடு காட்டுவதும் இனபாகுபாடுதான்' என்று வலியுறுத்திய இந்த அமைப்பு, ஜாதிப் பாகுபாட்டை தடை செய்யும் சட்டம் ஒன்றைக் கொண்டு வர வேண்டும் என்று நீண்டகாலமாக வற்புறத்தி வந்தது. பார்ப்பனர்கள் உயர்ஜாதியினர் 'இந்து' மதத்தின் பெயராலும் 'கோயில் பாதுகாப்புக் குழு' என்ற பெயராலும் சில அமைப்புகளை ஏற்படுத்திக் கொண்டு இந்தச் சட்டம் கொண்டு வரப்படக் கூடாது என்று அரசை நிர்ப்பந்தித்து வந்தன. கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவே இது குறித்து விவாதங்கள் பிரிட்டனில் நடந்து வந்தன. ஜாதியப் பாகுபாடு இனப் பாகுபாடுதான் என்று அய்.நா. ஏற்றுக் கொண்டதன் அடிப்படையில் பிரிட்டன் நாடாளுமன்றமும் அய்.நா.வின் இந்தக் கொள்கைக்கு ஒப்புதல் வழங்கியது. பிரிட்டன் ஆட்சியே உருவாக்கியுள்ள சமத்துவம் மற்றும் மனித உரிமைக்கான ஆணையமும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டது. இந்த அடிப்படையில் இனப்பாகு பாட்டைத் தடை செய்திருப்பது போல் ஜாதியப் பாகுபாடுகளைத் தடை செய்யும் சட்டத்தை பிரிட்டன் நாடாளு மன்றத்தில் கொண்டுவரவேண்டும் என்று 'ஜாதி எதிர்ப்பு பாகுபாடுகளுக்கு எதிரான கூட்டணி' என்ற ஒடுக்கப்பட்ட மக்களுக்கான அமைப்பு வலியுறுத்தி வந்தது. இது குறித்து பொது விவாதங்களும் நடந்தன. பிரிட்டனில் அமுலில் உள்ள 'சமத்துவத்துக்கான சட்டம்-2010இல் இதற்கான 9ஆவது திருத்தமாக ஜாதிப் பாகுபாடுகளும் சமத்துவத்துக்கு எதிரானது என்ற திருத்தம் 2013ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. பிரபுக்கள் சபை இதற்கு ஆதரவாக ஓட்டளித்தது. பிரிட்டன் தொழிலாளர் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜெர்மி கார்பைன், இதில் மிகவும் ஆர்வம் காட்டி செயல்பட்டதோடு பிரிட்டிஷ் பொது அவையிலும் இந்தத் திருத்தத்தை சட்டமாக்க முயன்றார். இந்தியாவில் பா.ஜ.க. ஆட்சி வந்தவுடன் நிலைமை முற்றிலும் மாறத் தொடங்கியது. 2014ஆம் ஆண்டு ஜாதியப் பாகுபாட்டுக்கு எதிராக தனிச் சட்டம் தேவை இல்லை என்று 'இந்து' அமைப்புகள் குரல் கொடுக்கத் தொடங்கின.

இது குறித்து கருத்துகளைக் கேட்க ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. 13 கேள்விகளடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு கருத்துகள் கேட்கப்பட்டன. தெற்கு ஆசியாவைச் சார்ந்த 16,000த்துக்கும் அதிகமானோர் தங்கள் கருத்துகளைப் பதிவு செய்தனர். இப்போது திடீரென்று பிரிட்டன் தனது முடிவை மாற்றிக் கொண்டு ஜாதிப் பாகுபாட்டை இனப் பாகுபாடாக ஏற்க முடியாது என்று கடந்த ஜூலை மாதம் 23ஆம் தேதி அறிவித்து விட்டது. தலித் அமைப்புகளும் ஜாதி எதிர்ப்பு அமைப்புகளும் அரசின் இந்தத் திடீர் மாற்றத்தால் கடும் ஏமாற்றமடைந் துள்ளனர். அரசு தலித் மக்களை ஏமாற்றிவிட்டது; இந்த முடிவு மிகவும் வேதனைத் தருகிறது. தலித் மக்கள் பாகுபாடுகளுக்கு உள்ளாகி வருவதை ஒரு பிரச்சினையாகவே கருதவில்லை. பிரிட்டனில் வாழும் உயர்ஜாதியினரை திருப்திப்படுத்தவும் இந்தியாவின் உயர்ஜாதியினரை திருப்திப்படுத்தவும் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது என்று 'ஜாதி கண்காணிப்பு' என்ற அமைப்பின் தலைவர் சத்பால் மியுமன் கூறியுள்ளார்.

இந்துத்துவா அமைப்புகளின் அரசியல் அதிகாரக் குறுக்கீடுகள் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவை மாற்றிச் செய்து விட்டதாகவே ஜாதி எதிர்ப்பு அமைப்புகள் கூறுகின்றன.

# வெறுப்பு அரசியலை வளர்க்கும் 'குஜராத் மாடல்'

**பீகார் – உத்திரப்பிரதேச இந்திக்காரர் களையே விரட்டி அடிக்கிறது, மோடியின் குஜராத். இவர்கள் 'இந்து' தேசத்தை உருவாக்கப் போகிறார்களாம். உண்மையில் 'குஜராத்' என்பது மோசமான உணர்ச்சியின் உதாரணம்தான்.**

பிரதமர் நரேந்திர மோடியாலும், பாஜக வினராலும் மிகவும் தம்பட்டம் அடிக்கப்பட்ட 'குஜராத் மாடல்', பீகார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங் களிலிருந்து புலம்பெயர்ந்து வந்து வேலைகளைச் செய்துகொண்டிருந்த தொழிலாளர்கள் குஜராத்திலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருப்பதன் மூலமாக மீண்டும் ஒருமுறை தன் கோர வடிவத்தை மக்கள் மத்தியில் தோலுரித்துக் காட்டிக் கொண் டிருக்கிறது. அவர்கள் மீது ஏவப்படும் வன்முறை வெறியாட்டங்களின் காரண மாகவும், அவர்களுக்கெதிரான பிரச்சாரங்கள் மூலமாகவும் மோடியின் 'குஜராத் மாடல்' எந்த அளவிற்கு சமூக ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் படுதோல்வி அடைந்துள்ளது என்பதை இன்னும் முழுமையாக வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது. குஜராத்தி லிருந்து அச்சத்துடன் மீண்டும் தங்கள் மாநிலங் களுக்குத் திரும்பும் தொழிலாளர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் பீகார் மற்றும் உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். உண்மையில் இவர்கள் அனைவரும், 2014 மக்களவைத் தேர்தலின் போது மோடிக்காகவும் பாஜக விற்காகவும் 'குஜராத் மடலை'ப் பிரச்சாரம் செய்வதற்காக குஜராத் வந்தவர்கள். புலம்பெயர்ந்து வந்த தொழிலாளர்கள் தற்போதைய வன்முறை வெறியாட்டங்களின் விளைவாக, வெளியேறுவது என்பது, எப்படித் தொடங்கியது? குஜராத்தின் சபர்கந்தா மாவட்டத்தில் ஹிம்மத்நகர் அருகில் 14 மாதப் பெண்குழந்தை வன்புணர்வுக் கொடுமைக்கு ஆளானது. இதற்கு பீகாரைச் சேர்ந்த புலம்பெயர்ந்து வந்த தொழிலாளி ஒருவர்தான் காரணம் என்றுகுற்றம் சாட்டப்பட்டு, "அயலார்களை விரட்டியடிப்போம்" என்று வெறுப்புப் பிரச்சாரம் கட்டவிழ்த்துவிடப்பட்டதுதான் காரணமாகும்.

கடந்த நான்கு நாட்களாக, புலம் பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வட குஜராத்தி லிருந்து, இரயில்கள், பேருந்துகள், லாரிகள் என எந்தவிதமான போக்குவரத்து கிடைத்தாலும் அதன்மூலம் தங்கள் ஊரை நோக்கிச் சென்று கொண் டிருக்கிறார்கள். மீண்டும்தங்கள் ஊருக்குத் திரும்பிச் செல்ல முடியாத நிலையில் உள்ள ஒருசிலர் மட்டும் வஸ்த்ரால் என்னுமிடத்தில் உத்தர்பாரதிய விகாஸ் பரிஷத் என்னும் அமைப்பின் தொண்டர்களால் அமைக்கப் பட்டுள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டிருக் கிறார்கள். குஜராத் காவல் துறைத் தலைவர் சிவானந்த் ஜா, செய்தியாளரிடம் கூறுகையில், வன்முறையாளர்களுக்கு எதிராக இதுவரை 42 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 342 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறினார். தொழிலாளர்கள் நவராத்திரி, தீபாவளி மற்றும் தங்கள் மாநிலத்தில் நடைபெறும் சில பண்டிகை களைக் கொண்டாடுவதற்காகத் தான் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அவர் கூறிக் கொண்டார், அது பொய் என்பது அவருக்கே தெரியும்.

குஜராத் மாநிலத்தில் சமீப காலங்களில் வன்புணர்வுக் கொடுமைகள் ஏராளமாக அரங்கேறி யிருக்கின்றன. எனினும் இப்போது ஒரு குழந்தை வன்புணர்வுக் கொடுமைக்கு ஆளாகியிருக்கிறது. கடந்த சில ஆண்டு களாகவே, பிரதமர் நரேந்திர மோடியும், பாஜக தலைவர் அமித் ஷாவும் 'குஜராத் மாடலை' இந்தியா முழுமைக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்று முயற்சிகளை மேற்கொண்டு வந்தார்கள். பாஜகவின் வெறுப்பு அரசியலின் ஓர் அங்கமாக, குஜராத்திற்கு புலம்பெயர்ந்து வந்தவர் களுக்கு எதிராகவும்பிரச்சாரத்தை மேற்கொண்டு வந்தவர்கள் வேலையில்லா இளைஞர்கள் தான். ஆனால் அவர்களுக்கும்கூட கவுரவம ான வேலை எதுவும் கிடைத்திடவில்லை. இவர்கள் தங்கள் கோபத்தை, இதற்குக் காரணமான ஆட்சியாளர் களுக்கு எதிராகத் திருப்பாமல், எவ்விதத்திலும் காரணமற்ற, புலம்பெயர் தொழிலாளர்களுக்கு எதிராகத் திருப்பி இருக்கிறார்கள். இவ்வாறாவது தங்களுக்கு வேலை கிடைக்கலாம் என நம்புகிறார்கள். அரசாங்கத்திடமிருந்து பல்வேறு சலுகைகள் பெற்றுநிறுவனங்களை அமைத்திடும் தனியார் தங்கள் நிறுவனங்களில் ஒரு குறிப்பிட்ட அளவு அதாவது 80 சதவீதம் - உள்ளூர் ஆட்களுக்கு வேலை அளித்திட வேண்டும் என்பதுமாகும். இதனை அவர்கள் நிறைவேற்றத் தவறியதும் இப்போது ஏற்பட் டிருக்கிற பிரச்சனைக்குக் காரணமாகும்.இந்த அம்சத்தை, காங்கிரஸ் எம்எல்ஏ அல்பேஷ் தாகூர் என்பவர் சமீபத்தில் பேசியிருக்கிறார். இதனைத் தொடர்ந்து இவர்தான் வன்முறையைத் தூண்டிவிடுகிறார் என்று தற்போது சமூக வலைத்தளங்களில் பிரச்சாரம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. குஜராத்தில் நடைபெற்றுவரும் சம்பவங்கள் குறித்து சமூக விஞ்ஞானியும், எழுத்தாளருமான அச்யுத் யக்னிக் கூறுகையில், "இதன்மூலம், அரசாங் கத்தின் பொருளாதாரக் கொள்கையின் தோல்வி மிகவும் தெளிவாகத் தெரிகிறது. வேலையற்ற இளைஞர்களின் பிரச்சனை களைத் தீர்த்திட, அரசாங்கம் தவறிவிட்டது. மாநிலத்தில் மிகவும்வலுவாக உள்ள தாகூர்கள் என்னும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினரில் கூட இன்றைய தினம் வேலையின்மை மிகப்பெரிய அளவில் காணப்படுகிறது" என்கிறார். அவர் மேலும் கூறுகையில், "சிறிய அளவில் நிலம் வைத்திருந்த விவசாயிகள், 'குஜராத் மாடல் என்பதன்கீழ் வளர்ச்சி' என்கிற மாயைக்குப் பலியாகி, தங்கள் நிலங்களை விற்றுவிட்டு, தொழிலாளியாக மாறத் தயாரானார்கள். எனினும், பிற மாநிலங்களிலிருந்து வந்த தொழிலாளர்கள் எந்த வேலையையும், எந்த சம்பளத்திற்கும் செய்யத் தயாராய் இருந்த நிலையில், நடுத்தர மற்றும் உயர் நடுத்தர வகுப்பைச் சேர்ந்த உள்ளூர்வாசிகளால் அவர்களுடன் போட்டி போட முடியவில்லை. இதுவும் பிற மாநிலத்த வருக்கு எதிராக உள்ளூர்வாசிகளுக்கு கோபம் ஏற்படுவதற்குக் காரணமாகும்" என்கிறார்.

### வெறுப்பு அரசியல்

குஜராத் மாநிலத்தில் இப்போது ஏற்பட் டிருக்கும் மோசமான நிலைமைக்கு காரணம் 'குஜராத் மாடலின்' பொருளாதாரத் தோல்வி மட்டுமல்ல; மாறாக, கடந்த முப்பதாண்டு காலமாக இந்துத்துவா அமைப்புகளும், பாஜகவும் அங்கு முஸ்லிம்கள் உட்பட மதச் சிறுபான்மையினர், தலித்துகள் மற்றும் இப்போது புலம்பெயர்ந்து வந்துள்ளஅயல் மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு எதிராக மேற்கொண்டுவந்த வெறுப்பு அரசியல் பிரச்சாரமும் காரணங்களாகும். இவ்வாறான 'வெறுப்பு அரசியல்' என்னும் பூதம்தான் குஜராத்தை இப்போது ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது."வெறுப்பு அரசியல் இப்போது புதியதொரு வடிவத்தில் வந்திருக்கிறது.1980களில் இட ஒதுக்கீட்டிற்கு எதிராக உருவான கிளர்ச்சிப் போராட்டங்கள், 1985வாக்கில் மிகவும் சூழ்ச்சிகரமான முறையில் வகுப்புவாத மோதல்களாக மாற்றப்பட்டன. பின்னர் 1986-87 மற்றும்1990-92களில் ராம ஜென்மபூமி-பாபர் மசூதி பிரச்சனையைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிரான மதவெறி வன்மம் நிறைந்த சம்பவங்களாக மாற்றமடைந்தன. பின்னர் 2002 கலவரங்கள் வெடித்தன," என்று யாக்னிக் விளக்குகிறார். 2002 கலவரங்களுக்கு முன்னர், 1998களில் தெற்கு குஜராத்தின் பழங்குடியினர் வாழும் பகுதிகளில் கிறித்துவர்களுக்கு எதிரான வன்முறை வெறியாட்டங்கள் தொடக்கி வைக்கப்பட்டன. இவர்களுடைய வெறுப்பு அரசியலானது கடந்த இரண்டு ஆண்டுகளாக, தலித்துகளுக்கு எதிராக விஸ்வரூபம் எடுத்திருப்பதை நன்குகாண முடிகிறது. இதற்கு உனா சம்பவம் முக்கிய எடுத்துக் காட்டாகும். இப்போது பிற மாநிலத்தவர் களை "வெளிநபர்கள்" என்று முத்திரை குத்துகிற பிரச்சாரமாக உருவெடுத்திருக் கிறது.'குஜராத் மாடலின்' இருண்ட பக்கம் இப்போது தெளிவாகத் தெரியத் தொடங்கி விட்டது. விவசாய நெருக்கடி, வேலை யின்மை, வெறுப்பு அரசியல் ஆகியவற்றால் குஜராத் பீடிக்கப்பட்டிருக்கிறது. இதரபகுதி மக்களுக்கு இது ஓர் எச்சரிக்கை என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறில்லாது, 'குஜராத் மாடலை' இன்னமும் மக்கள் நம்பினார்கள் என்றால், 2019 மக்களவைத் தேர்தலுக்கு முன்னர் இதுபோன்ற பதற்ற நிலைமைகள் இன்னும் உருவாக்கப்படக் கூடும்.

**'தி ஒயர்' இணைய இதழில் வெளி வந்த கட்டுரை**

## ஆதாரங்களுடன் கொளத்தூர் மணி விளக்கம் (5)

# விடுதலைப் புலிகளே தங்களை திராவிடர்கள் என்றே பதிவு செய்தனர்

*“கருஞ்சட்டைக் கலைஞர்” என்ற தலைப்பில் திருச்செங்கோட்டில் 30.09.2018 ஞாயிறு அன்று நடந்த கருத்தரங்கில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆற்றிய உரை.*

பெரும்பான்மை மக்களாகிய நம்மை, எண்ணிக்கையில் சிறுபான்மை மக்களாகிய பார்ப்பனர்களுடன் ஒப்பிட்டு நம்மைப் பார்ப்பனர் அல்லாதவர்கள் என்று கூறுவதா என்று கேட்ட பெரியார். சிதம்பரத்தில் ஒருமுறை பேசும்போது கூட பெரியார் கேட்டார். ”உங்களைப் பார்த்து ஈரோட்டவர் அல்லாதவர்களே (Non Erodians) என்று நான் பேச இயலுமா? ஈரோட்டிலிருந்து நான் மட்டும்தான் வந்திருக்கிறேன். நீங்கள் 10,000 பேர் இருப்பீர்கள் என்றால் நீங்கள் எல்லாம் இந்த ஊர். அதுபோலத்தான் எண்ணிக்கையில் குறைவாக இருக்கிற பார்ப்பனர்களை ஒப்பிட்டு நம்மைக் குறிக்க பார்ப்பனர் அல்லாதவர் என்ற சொல்லை பயன்படுத்தக் கூடாது” என்று பேசினார். அதற்கு மாற்றாக ஒரு உடன்பாட்டுச் சொல்லாக, எதிர்மறைச் சொல்லாக அல்லாமல், நேர்மறைச் சொல்லாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் திராவிடர் என்ற சொல்லை 1939ஆம் ஆண்டு பெரியார் பரிந்துரைத்தார்.

இதன் தொடர்ச்சியாகத்தான் 1944ஆம் ஆண்டு நீதிக் கட்சியை பெரியார் திராவிடர் கழகமாகப் பெயர் மாற்றினார். ஆனால் பார்ப்பனர் அல்லாதோர் சங்கம் தொடங்கிய காலங்களிலேயே தன்னுடைய கிளை சங்கங்களுக்கு திராவிடர் சங்கம் என்றுதான் பெயர் வைத்தார்கள். தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் இராயப்பேட்டை கிளைக்கு திராவிடர் சங்கம் என்றுதான் பெயர் வைத்தார்கள். ஜார்ஜ் டவுன் திராவிடர் சங்கம் என்று பெயர் வைக்கப்பட்டிருந்தது. இவையெல்லாம் 1917, 1918ஆம் ஆண்டுகளிலேயே இருந்தது. பின்னாளில் அவற்றின் பெயர்களை மாற்றினார்கள், அது ஒருபக்கம் இருக்கட்டும். 41 1/2 மில்லியன் (4 கோடியே 15 லட்சம்) மக்கள் பார்ப்பனர் அல்லாதார் இருக்கிறோம் என்று பார்ப்பனர் அல்லாதார் அறிக்கையில் சொன்னார்கள்.

அதில் 1 1/2 மில்லியன் கூட இல்லாதவர்கள்தான் 40 மில்லியன் மக்களை சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள். உற்பத்தியில் எந்தத் துறையிலும் ஈடுபடாத அவர்கள்தான் சுகமான வாழ்க்கையை, உழைப்பில்லாத வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்று அந்த அறிக்கை கூறுகிறது. ‘விதைக்காமல் விளையும் கழனி’ என்று இதற்கு அண்ணா மிக சுருக்கமான வரியில் விளக்கம் கொடுப்பார். இதுதான் திராவிடர் இயக்கத்தின் தொடக்கம். இன்றைக்கும் அப்படி இருக்க விரும்புகிறார்கள். எனவே பெரியார், அண்ணா, கலைஞருக்கு முன்பே திராவிடர் என்ற சொல் வழக்கில் இருந்தது என்பதற்காகவே இதைச் சொன்னேன்.

அயோத்திதாசரைப் பற்றியும் சொல்லுவார்கள். ஆங்கிலேயர் கொண்டுவந்த ஆட்சிப் பொறுப்புகளில் எல்லாம் இந்தியர்களுக்கும் பங்கு வேண்டுமென்று கேட்டு காங்கிரசுதான் முதலில் ஒரு சங்கம் வைத்தது. இந்திய வேலைகளை இந்தியர்களுக்கு கொடு என்று ஆங்கிலேயர்களிடம் அவர்கள் மனு கொடுத்தார்கள். அந்த மனுவின் அடிப்படையில் ஆங்கிலேயர்களும் வேலை கொடுத்தார்கள்.



ஆனால் அவர்கள் கொடுத்த வேலைகளை எல்லாம் பார்ப்பனர்களே வைத்துக் கொண்டார்கள். இதைப் பலபேர் எதிர்த்தார்கள். முதல் எதிர்ப்பு தமிழ்நாட்டிலிருந்துதான் வந்தது.

தமிழ்நாட்டில் அப்போது விசுவகர்மா சங்கம் என்று ஒன்று இருந்தது. அவர்களை ஐம்பொன் தொழிலாளர்கள் என்று சொல்லுவார்கள். அவர்கள் இதற்கு எதிர்ப்பு தெரிவித்தார்கள். திராவிட மகாசன சபை என்று பெயர் மாற்றப்பட்ட ஆதிதிராவிடர் மகாசன சபை இதை எதிர்த்தது. இதனுடைய தலைவராக இருந்தவர் அயோத்திதாசர். 156 அடி நீளம் உள்ள மனு என்று நினைக்கிறேன். அதில் கையெழுத்து வாங்கி அவர் அந்த மனுவை அளித்தார். எல்லா வேலைகளையும் பார்ப்பனர்களே வைத்துக்கொள்கிறார்கள். எனவே வேலைகள் அனைத்தையும் பிரித்துக் கொடுங்கள் என்று அந்த மனுவில் அயோத்திதாசர் கோரிக்கை வைத்திருந்தார்.

ரிவரண்டு ஜான் ரத்தினம் என்று ஒருவர் இருந்தார். 1890களில் இவர் திராவிடர் கழகம்

> **‘திராவிடம்’, ‘திராவிடர்’ என்ற சொற்றொடர் பெரியார்-அண்ணா இயக்கங்களுக்கு முன்பே தமிழகத்தில் தோன்றிவிட்டது**

என்ற அமைப்பை வைத்திருந்தார். அதிலும் அயோத்திதாசர் இருந்துள்ளார். அங்கிருந்து வந்தவர்தான் தனியாக ஒரு அமைப்பைத் தொடங்கி, பத்திரிகையும் நடத்தி வந்தார். அதற்குப் பின்னால் பெரியாரின் சுயமரியாதை இயக்கம் வந்தபின்னால் கோவில்பட்டியில் 1927ஆம் ஆண்டு ஒரு கூட்டத்தில் பேசுகிறார். அது திராவிடர் கழகத்தின் 18ஆவது ஆண்டு விழா. சிவஞான யோகி என்ற ஒருவர் அங்கு போய் ஒரு அமைப்பை நடத்திக் கொண்டிருந்தார். இவர் கோவை மாவட்டம் அவினாசியைச் சேர்ந்தவர். அவர் ஒரு துறவியும்கூட. ஆனாலும் பார்ப்பனர் அல்லாதோர் இயக்கமாக இதை நடத்திக்கொண்டு வந்தார்.

நீண்ட நெடிய காலமாக பார்ப்பனர் அல்லாதாரைக் குறிக்கிற ஒரு சொல்லாக திராவிடர் என்ற சொல்லைப் பயன்படுத்தி வந்துள்ளனர் என்பதற்காக இவற்றைச் சொல்கிறேன். அந்த சொல்லைப் பற்றி இந்த வேளையில் இன்னும் சிலவற்றைப் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். இப்போது சிலர் எங்கள் அண்ணன் பிரபாகரன் தமிழன், நாங்கள் எப்படி திராவிடன் என்று கேட்கின்றனர். முதலில் இதிலிருந்து தொடங்க வேண்டுமென்று நினைக்கிறேன். சிறியவர்களிலிருந்து மூத்தவர்களுக்குப் போவோம். ஈழத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழரசு கட்சி உள்ளது. மாவை. சேனாதிராஜா அதனுடைய பொதுச் செயலாளராக உள்ளார். சம்மந்தம் தலைவராக உள்ளார்.

’அவர் தமிழீழம் மலர’ என்ற ஒரு புத்தகத்தை எழுதியுள்ளார். ”இலங்கை ஒரு தீவு, ஆனால் இலங்கை இரு நாடு. அதுவும் ஒரு குறிப்பிட்ட கால எல்லைக்குப் பின்னர்தான். அதற்கு முன்னர் இலங்கை முழுவதும் ஒரு திராவிடர் நாடு” என்று அவர் அந்த நூலில் சொல்கிறார். ஈழத் தமிழர்களுடைய நாட்டை அவர் ஒரு திராவிடர் நாடு என்று சொல்கிறார். “இந்த நாட்டிற்கு இப்போது வந்த சிங்கள இனம் நம்மைக் கைப்பற்ற பார்க்கிறது. இலங்கை உட்பட தென்னாடு வரையில் பரந்து வாழ்ந்த திராவிட இனத்தின் வழித் தோன்றலே தமிழினம்” என்பதையெல்லாம் சொல்லி அவர் இந்த நூலை அவர் தொடங்கியுள்ளார்.

1940ஆம் ஆண்டு நவம்பரில் டெல்லியில் ஒரு மாநாடு நடக்கிறது. ஆங்கிலேயர்கள் நடத்திய மாநாடு அது. அந்த மாநாட்டில் இலங்கையில் இருக்கிற ஈழத்தமிழர்கள் சார்பாக ஒரு மனு அளிக்கப்பட்டது. வரலாற்றுக் காலத்திலிருந்து திராவிடர்களாகிய தமிழர்கள் இங்கு வாழ்கிறோம் என்று அந்த மனுவில் அவர்கள் சொல்கிறார்கள். இருந்தாலும் அவர்கள் எல்லாம் பழைய தமிழர்கள். அவர்களுக்கு அறிவு சற்று குறைவு; புலிகளுக்குத்தான் அறிவு உள்ளது என்றும்கூட இவர்கள் சொல்லுவார்கள். விடுதலைப் புலிகள் இயக்கம் 1976ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பின்னால், 1978ஆம் ஆண்டு கியூபாவில் உலகம் முழுக்க இருக்கிற விடுதலைப் போராளிகள் எல்லாம் சேர்ந்து (மாணவர்கள், விடுதலை உணர்வுமிக்க போராளிகள் இணைந்து) ஒரு மாநாட்டை நடத்தினார்கள்.

அந்த மாநாட்டில் விடுதலைப் புலிகள் ஒரு அறிக்கையை அளித்தார்கள். “சிலவற்றை நாங்கள் உலக நாடுகளுக்கு அறிவிக்க விரும்புகிறோம் என்று தொடங்கும் அந்த அறிக்கையில் Who Are Tamils (Dravidians), என்ற துணைத் தலைப்பில் இலங்கையில் வாழ்கிற திராவிடர்களாகிய நாங்கள்” என்று கூறியிருக்கிறார்கள். மேலும், அங்கு தமிழ்த் தேசிய உணர்வுகொண்ட பல அறிஞர்கள் இருந்தார்கள். தாராக்கி சிவராம் என்ற பெரிய பத்திரிகையாளர், இராணுவ முறைகளில், படை மரபியலில் பெரிய அறிஞராகக் கருதப்பட்டவர். உலக நாடுகளில் நடந்த படையெடுப்பு பற்றியெல்லாம் எழுதியவர். அவரை அடையாளம் தெரியாத அளவுக்கு சிங்களர்கள் சுட்டுக்கொன்று விட்டனர். இன்றளவிலும் அவரைக் கண்டுபிடிக்க முடியாமல் போய்விட்டது.

அவர் எழுதியிருக்கிறார். “தமிழர்களுடைய, புலிகளுடைய தமிழ்த்தேசிய சிந்தனை எங்கிருந்து வந்தது? திராவிட மரபிலிருந்து வந்த தமிழ்த்தேசிய உணர்வோடு போராடியவர்கள்” என்று தொடங்கி கட்டுரை எழுதியுள்ளார். புலிகளுக்கு முன்னால் தமிழ்த்தேசிய அரசியல்வாதிகள் பலர் இருந்தார்கள். அதில் நவரத்தினம் என்பவர் குறிப்பிடத்தக்க ஒருவர். ஈழத்தமிழர்களின் வேண்டுகோள் என்று ஒரு அறிக்கையை வெளியிடுகிறார். அது சிங்களர்களுக்குப் போய்ச் சேர வேண்டுமென்பதற்காக சிங்களத்திலும் வெளியிடுகிறார். அந்த அறிக்கையில் சிங்கள மொழியிலும்கூட திராவிட என்ற வார்த்தையையே அவர் பயன்படுத்தியுள்ளார்.

(தொடரும்)

தொகுப்பு: ர.பிரகாசு

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# புல்லட் இரயில் : கடன்சுமை ரூ. 6,160 கோடி அதிகரித்தது !

ஜப்பான் நாட்டு நாணயமான 'யென்'னின் மதிப்பு, தொடர்ந்து உயர்ந்துகொண்டே போவதால், புல்லட் ரயில் திட்டத்திற்காக இந்தியா பெற்ற கடன்தொகையில் திடீரென ரூ. 6 ஆயிரத்து 160 கோடியை அதிகமாக செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.திட்டப்பணிகளே இன்னும் துவங்கப்படாத சூழலில் கடன்மதிப்பு- அதுவும் ஒரே ஆண்டில் ரூ. 6 ஆயிரம் கோடி அதிகரித்துள்ளது ரயில்வே துறைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஜப்பான் நாட்டு கடனுதவியுடன் மும்பை அகமதாபாத் இடையே 508 கி.மீ. தூரத்திற்கு ரூ.1 லட்சம் கோடி செலவில் புல்லட் ரயில் திட்டம் செயல்படுத்தப்படும் என்று பிரதமர் மோடி அறிவித்தார். 'இந்தியாவின் முதலாவது அதிவேக புல்லட் ரயில் திட்டம்' என்றும் இத்திட்டத்தை அவர் அழைத்தார்.

மேலும், குஜராத் தேர்தலையொட்டி, ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே-வை இந்தியாவுக்கே நேரில் வரவழைத்து கடந்த ஆண்டு அகமதாபாத்தில் புல்லட் ரயில் திட்டத்தை மோடி துவக்கி வைத்தார்.

அப்போதே இத்திட்டத்திற்கு பெரும் எதிர்ப்பு எழுந்தது. இந்தியா போன்ற நாட்டில் சாதாரண மக்களும் பயணிக்கும் வகையிலான ரயில்களை இயக்குவதுதான் சரியாக இருக்கும். புல்லட் ரயில் எல்லோருக்கும் பயன்படாது. இப்படியொரு திட்டத்திற்கு ரூ.1 லட்சம் கோடியை முடக்க வேண்டியதில்லை. பணமதிப்பு நீக்கம், ஜிஎஸ்டி-யைப் போல இதுவும் தோல்வி அடையும் என்று பல்வேறு தரப்பினரும் எதிர்ப்பு தெரிவித்தனர். எனினும் அதையெல்லாம் கண்டுகொள்ளாமல் தற்போது புல்லட் ரயில் திட்டத்திற்கான நிலமெடுக்கும் வேலைகள் நடந்து வருகின்றன. சுமார் 100-க்கும் மேற்பட்ட பழங்குடியின மக்கள் அவர்களின் வாழ்விடத்திலிருந்து விரட்டப்பட்டு வருகின்றனர். தங்களின் கிராமங்கள் முற்றிலுமாக அழியும் நிலையில் பழங்குடி மக்கள் வேதனையுடன் போராடி வருகின்றனர்.

மத்திய பாஜக அரசோ, 2018-க்குள் நிலமெடுக்கும் பணிகளை முடித்துவிட்டு, 2019 ஜனவரியில் புல்லட் ரயில் திட்டப் பணிகளை துவங்கி விடுவது என்று தீவிரமாக உள்ளது.

இந்நிலையில்தான் புல்லட் ரயில் திட்டத்திற்கான கடன்மதிப்பு திடீரென அதிகரித்து, மோடி அரசுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புல்லட் ரயில் திட்டத்திற்காக இந்தியா ரூ. 1 லட்சம் கோடியை செலவிட உள்ளது. இதில் ரூ. 88 ஆயிரம் கோடியை ஜப்பான் அரசிடம்தான் 0.1 சதவிகித வட்டிக்கு இந்தியா கடன் வாங்கியுள்ளது. இதனை 50 ஆண்டுகளுக்குள் இந்தியா திருப்பிச் செலுத்த வேண்டும். கடந்த 2017-ஆம் ஆண்டு செப்டம்பர் 15-ஆம் தேதி, புல்லட் ரயில் கடன் திட்டத்திற்கான ஒப்பந்தம் கையெழுத்தானது.

இந்தியா கடன் வாங்கியபோது, போரெக்ஸ் சந்தை நிலவரப்படி ஜப்பான் நாட்டு நாணயமான 'யென்' மதிப்பு 57 பைசாவாக இருந்தது. இது கடந்த ஜூலை 25-ஆம் தேதி 61 பைசாவாகவும், ஜூலை 31 அன்று 62 பைசாவாகவும் உயர்ந்துள்ளது.இதனால் இந்தியா ஜப்பானுக்கு திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை, வாங்கிய கடன்தொகையைக் காட்டிலும் திடீரென ரூ. 6 ஆயிரத்து 200 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. இதில் வட்டி சேர்க்கப்படவில்லை. அதையும் சேர்த்தால் பல ஆயிரம் கோடிகளை ஜப்பானுக்கு அள்ளித்தர வேண்டும்.யென் நாணய மதிப்பு மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுவதால், இந்தியாவின் கடன்மதிப்பும் வட்டியும் பலமடங்கு அதிகரிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

ஏனெனில் கடந்த 10 ஆண்டுகளாகவே இந்திய ரூபாய்க்கு நிகரான ஜப்பான் நாட்டின் யென் மதிப்பு அதிகரித்து வருகிறது. 2007-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-ஆம் தேதி ரூபாய்க்கு நிகரான யென் பரிவர்த்தனை மதிப்பு 0.3517 பைசாவாக இருந்தது என்றால், அதுவே 2017 செப்டம்பர் 15-இல் 0.5786 பைசாவாக உயர்ந்தது. தற்போது 62 பைசாவையை நெருங்கியுள்ளது.

இதனால், தற்போது ஒரே ஆண்டிலேயே திடீரென ரூ. 6 ஆயிரத்து 160 கோடி அதிகரித்துள்ளது.

அப்படியிருக்க, ஜப்பானிடம் வாங்கிய கடனை 50 ஆண்டுகளுக்கு திருப்பிச் செலுத்த வேண்டும் எனும்போது அதற்குள்- வட்டி அல்லாமல் கடன் மதிப்பிலேயே எவ்வளவு தொகையை அதிகமாக செலுத்த வேண்டியிருக்கும்? என்பதை நினைத்து ரயில்வே அதிர்ச்சியில் உறைந்துள்ளது.

# மாவட்டக் கழக கலந்துரையாடல் கூட்டங்கள்

**காஞ்சிபுரம் :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் காஞ்சிபுரம் மாவட்ட கலந்துரையாடல் கூட்டம் 18-10-2018 அன்று மாலை 5 மணிக்கு தினேஷ்குமார் தலைமையில் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன் மற்றும் தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி முன்னிலையில் நடைபெற்றது .

புரட்சிப் பெரியார் முழக்கம், நிமிர்வோம் இதழ்களுக்கு சந்தா சேர்த்தல், தெருமுனைக் கூட்டம், கருத்தரங்கம் நடத்துதல் குறித்து விவாதிக்கப்பட்டது. இதில் தென்சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், செங்குட்டுவன், தெள்ளமிழ்து, ரவிபாரதி, கரிகாலன், ஆண்டனி, ராஜேஷ், அருண் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**சங்கராபுரம் :** 18.10.2018 வியாழன் மாலை 4மணி அளவில் திராவிடர் விடுதலை கழக மாவட்ட கலந்தாய்வுக் கூட்டம் சங்கராபுரம் வட்டம் கடுவனூரில் சி. சாமி துரை இல்லத்தில் நடந்தது. கூட்டத்திற்கு கழகத் தலைமைக் குழு உறுப்பினர் நா.அய்யனார் தலைமை தாங்கினார். கூட்டத்தில் தமிழகத்தில் உள்ள அரசியல் சூழல்களும், பி.ஜே.பி.யினால் மக்கள் படும் அவலம் , பெரியாரியல் பற்றிய தமிழ் தேசியவாதிகளின் குழப்பம் பற்றியும், அமைப்பின் கட்டுப்பாடு, புரட்சிப் பெரியார் முழக்கத்திற்கு சந்தா சேர்த்தல் குறித்து விரிவாக விவாதிக்கப்பட் டது. மாவட்டத் தலைவர் மதி யழகன், மாவட்ட அமைப்பாளர் சி.சாமிதுரை, அறிவியல் மன்ற அமைப்பாளர் நாகராஜ், தமிழ்நாடு மாணவர் ஒருங்கிணைப்பாளர் வீ.வினோத், சங்கராபுரம் ஒன்றிய செயலாளர் செ.வே. ராஜேஷ் , மா. குமார், ரா. துளசி , பிரபு, நீதிபதி, ராஜீவ்காந்தி, ராமச்சந்திரன் தோழர்கள் உள்பட 36 தோழர்கள் கலந்துக் கொண் டனர் .

# கழகத் தலைவர் பங்கேற்ற எஸ்.டி.பி.அய். மாநாடு





திருச்சியில் 21.10.2018 ஞாயிறு அன்று நடைபெற்ற எஸ்.டி.பி.அய். அமைப்பின் ஒடுக்கப்பட்டோர் அரசியல் எழுச்சி மாநாட் டின் காலை அமர்வில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, 'நெருக்க டிக்குள்ளாகும் மத சார்பின்மையும், அரசியல் எழுச்சிக்கான தேவை யும்' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சிக்கு எஸ்.டி.பி.அய். கட்சியின் மாநில பொதுச்செயலாளர் அப்துல் ஹமீது தலைமை தாங்கினார். மாநில செயலாளர் ரத்தினம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

இந்நிகழ்ச்சியில் தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர்கு. இராமகிருட்டிணன், இந்திய தவ்ஹீத் ஜமாத் தலைவர் எஸ்.எம்.பாக்கர், மக்கள் கண்காணிப்பகத்தின் ஒருங்கிணைப்பாளர் ஆசிர்வாதம், தமிழ்ப் புலிகள் கட்சித் தலைவர் நாகை திருவள்ளுவன், ஜமாத்தே இஸ்லாமிய ஆலோசனைக் குழு உறுப்பினர் ஜலாலுதீன், தமிழ்த் தேச மக்கள் முன்னணித் தலைவர் மீ.த.பாண்டியன், கிருஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் இனிக்கோ இருதயராஜ், மே17 இயக்கத்தின் அருள் முருகன், பாப்புலர் ஃப்ரண்ட் மாநில பொதுச்செயலாளர் காலித் முகமது, ஆல் இந்தியா இமாம்ஸ் கவுன்சில் மாநில தலைவர் ஆபிருதீன் மன்பயி ஆகியோர் கருத்துரை வழங்கினர். நிகழ்ச்சியின் இறுதியாக மாநில செயலாளர் அபுபக்கர் சித்திக் நன்றியுரையாற்றினார்.


## தற்போது விற்பனையில்

**'நிமிர்வோம்' –**

**அக்டோபர் 2018 இதழ்**




- கோயில் பக்கம் திரும்பாதே - தலையங்கம்
- ஒரு பெரியார் தொண்டரின் வாய்மொழி வரலாறு
- தமிழனுக்காக நான் பலிகடா ஆகிறேன்" - பெரியாரின் உருக்கமான அறிக்கை
- விநாயகன் அரசியலுக்கு வந்த வரலாறு
- மோடி ஆட்சியில் சீர்குலைந்த பொருளாதாரம்
- பார்ப்பனர்களுடன் நேருக்கு நேர் வாதிட்ட புத்தர்

மற்றும் பெரியார் சிந்தனைகளுடன்...

தனி இதழ் விலை : ரூ.20

தொடர்புக்கு: நிர்வாகி, 95, டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், மயிலாப்பூர், சென்னை-600 004.

தொலைபேசி எண்: 044 24980745/7299230363

www.dvkperiyar.com/nimirvomdvk@gmail.com

## "புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம் **ரூ.200**

தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.

9841489896 newsdvk@gmail.com


Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 8th November 2018

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN